

முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் உயர்க்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் இணைந்து, "நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி" திட்டத்தின் கீழ் VIRTUSAA நிறுவனத்தின் சார்பில் வீரபாண்டி ஊராட்சியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் 16 வகுப்பறை கட்டடங்கள் புதிதாக கட்டப்படவுள்ள கிராம ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டினார்கள். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி ., சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், ஆ.சா.ஏ.பிரபு, பிரேமா அல்போன்ஸ், கல்பட்டு வி.இராஜா, ஒன்றிய குழு தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ் அன்பு, நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர் ராஜீவ் காந்தி, துணை தலைவர் மணிவண்ணன் உள்ளிட்ட பள்ளிக் கல்வி துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

# சேலம் மாவட்ட நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் - கலைஞர் திருவுருவச் சிலைகள் - நூலகங்கள்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் சிறப்புரை!

சேலம், ஆக. 25-

சேலம் மத்திய மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் 23.08.2024ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ஜிகே.சுபாசு தலைமையில் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் நடைபெற்றபோது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் சிறப்புரையாற்றினார்.

அத்தீர்மானங்கள்வருமாறு:-

**தீர்மானம்**

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 16.08.2024ஆம் நாள் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க, 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் மகத்தான வெற்றி பெறும் வகையில் சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், தோழர்கள் கவனமாகவும், திறமையாகவும் அர்ப்பணிப்பு உணர்வோடும் இப்போதிலிருந்தே அதற்கான ஆயத்த பணிகளில் ஈடுபட வேண்டும் எனவும், ஒன்றிய, பகுதி, பேரூர் அளவிலான பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் சேலம் மாநகரத்தில் உள்ள 60 வட்டங்களிலும், பேரூர் வார்டுகளிலும், ஊராட்சிகளில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும் பொது உறுப்பினர்கள் கூட்டம் செப்டம்பர் 5ஆம் தேதிக்குள் மாவட்ட, மாநகர, கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்களைக் கொண்டு நடத்தி முடிக்க வேண்டும் எனவும், அதே வேளையில் பகுதி, ஒன்றிய, பேரூர் அளவில் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பட்டியலை செப்டம்பர் 10ஆம் தேதிக்குள் மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும்,

நம் உயிரனைய மறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலையினை நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் அமைத்திட இடம் தேர்வு செய்து சிலை அமைப்பதற்கான முயற்சியினை அவசியம் மேற்கொள்ள வேண்டும் எனவும், கழக இளைஞர் அணி செயலாளர் இளந்தலைவர் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கழக இளைஞர் அணி சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் இளைஞர்கள், மாணவ, மாணவியர், கழக தோழர்கள் என ஆர்வமுள்ள அனைவரும் பயில்வதற்கு ஏதுவாக ஒரு நூலகம் அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும் எனவும் சேலம் மத்திய மாவட்டக் கழகம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தஞ்சை தெற்கு மாவட்டத்தில்

# ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஆக.25-

தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய,நகர, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரின் அறிக்கையில் கூறியிருப்பதாவது, தஞ்சை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைக் கழக, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்தக் கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டத்திற்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திட கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

25.08.2024 ஞயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பேராவூரணி வடக்கு ஒன்றியம், எஸ்.ஆர்.திருமண மஹால், திருச்சிற்றம்பலம், மாலை 4.மணிக்கு பேராவூரணி தெற்கு, ராஜா, இன்பா திருமண மண்டபம், பேராவூரணி, மாலை 6 மணிக்கு பேராவூரணி பேரூர், பேரூராட்சி திருமண மண்டபம், பேராவூரணி.

26.08.2024 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பட்டுக்கோட்டை நகரம், ராஜா மஹால், சீனிவாசபுரம், பட்டுக்கோட்டை. மாலை 4 மணிக்கு திருவோணம் தெற்கு, சித்தி விநாயகர் திருமண மண்டபம், ஊரணிபுரம், மாலை 6 மணிக்கு பட்டுக்கோட்டை மேற்கு ஸ்ரீ, தங்கம் திருமண மண்டபம், ஆலடிக்குமுளை.

29.08.2024 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மதுக்கூர் மேற்கு வி.ஆர்.டி.திருமண மண்டபம், படப்பைக்காடு. மாலை 4 மணிக்கு மதுக்கூர் கிழக்கு, வி.ஆர்.டி.திருமண மண்டபம், படப்பைக்காடு. மாலை 6 மணிக்கு எம்.எல்.கே திருமண மண்டபம் மதுக்கூர்.

31.09.2024 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பட்டுக்கோட்டை கிழக்கு, சமுதாய கூடம், தம்பிக்கோட்டை. மாலை 4 மணிக்கு பட்டுக்கோட்டை வடக்கு கிருஷ்ண அமிர்தா திருமண மண்டபம், துவரங்குறிச்சி.

01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சேதுபாவாசத்திரம் வடக்க, சிவமணி திருமண மண்டபம், இரண்டாம்புலிக்காட்டு, மாலை 4 மணிக்கு சேதுபாவாசத்திரம் தெற்கு, ஸ்ரீ வெங்கடேஷ்வரா திருமண மண்டபம், ரெட்டவயல், மாலை 6 மணிக்கு பெருமகளூர் பேரூர் பேரூராட்சி திருமண மண்டபம், பெருமகளூர். 02.09.2024 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு அதிராம்பட்டினம் கிழக்கு, கிழக்கு நகரக் கழக அலுவலகம், அதிராம்பட்டினம், 03.09.2024 செவ்வாய் கிழமை மாலை 6 மணிக்கு அதிராம்பட்டினம் மேற்கு, ஆயிஷா மகளிர் அரங்கம் அதிராம்பட்டினம். மேற்கண்டவாறு கூட்டங்கள் நடைபெறும் என்று தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.



நேற்று முன்தினம் (23.08.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலகத்திற்கான சுழற்கோப்பையை சட்டமன்றப் பேரவைச் செயலக அரசு முதன்மைச் செயலாளர் கி. சீனிவாசன் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் உள்வட்டம், நல்லாம்பட்டி கிராமம் செந்தாம்பாளையம் குளம், ஒட்டங்காடு பகுதியில் கரையை ஒட்டியுள்ள எல்.பி.பி வாய்க்காலில் தண்ணீர் கசிவு ஏற்பட்டதை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### மூன்று மாவட்ட மக்களின் 60 ஆண்டுகால கனவான

# அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை நிறைவேற்றிய முதல்வருக்கு நன்றி!

## திருப்பூர் வடக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! க.செல்வராஜ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருப்பூர், ஆக. 25-

திருப்பூர் வடக்கு மாவட்ட செயற்க்குழு கூட்டம் 19.08.2024 திங்கள்கிழமை அன்று மாவட்டக் கழக அலுவலக மான கலைஞர் அறிவாலயம் முரசொலி மாறன் வளாகத்தில் அவைத் தலைவர் க. நடராஜ் தலைமையில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செய லாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றி னார்.

இதில் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செய லாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள்பலர்கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:-

இந்திய திருநாட்டின் தென்கோடி முனையில், சோழ சாம்ராஜ்யத்தின் புலிக்கொடி பட்டொளி வீசி பறந்த தஞ்சை தரணியில், திருக்குவளை எனும் குக்கிராமத்தில் பிறந்த முத்தமிழறிஞரின் நூற்றாண்டு நிறைவு விழா.

தலைவர் கலைஞரை அவரது நூற்றாண்டில் போற்றுகிற வகையில் இந்திய ஒன்றிய அரசின் சார்பில் நூறு ரூபாய் நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு நாணயத்தை மத்திய அமைச்சர் திரு. ராம்நாத் சிங் அவர்கள் வெளியிட தலைவர் தளபதி அவர்கள் பெற்றுக்கொண்டார். தமிழாகவே வாழ்ந்த தமிழத் தலைவர் கலைஞர் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட நூறு ரூபாய் நாணயத்தில் தலைவர் கலைஞர் உருவத்துடன் அவர் கையெழுத்திலான "தமிழ் வெல்லும்" என்கிற சொற்களும் இடம்பெற்றுள்ளன. தலைவர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மற்றொரு மணிமகுடமாக மற்றொரு வைரமாக அவரது உருவம் பொறித்த நாணயத்தை வெளியிடுகின்ற ஒன்றிய அரசுக்கு இந்த கூட்டம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களின் நாணயம் வெளியிடப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்து தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்த்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும் இக் கூட்டம் பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது..

"நீரின்றி அமையாது உலகு" என்கிற வள்ளுவரின் குறலுக்கு ஏற்ப, நீரின் தேவையை கருத்தில் கொண்டு திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மூன்று மாவட்ட மக்களின் 60 ஆண்டு கால கனவான அவினாசி அத்திக்கடவு திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. சுமார் 24,468 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 1972ல் தலைவர் கலைஞர் செயல்படுத்திட முனைந்த அத்திக்கடவு அவிநாசி திட்டம் பல்வேறு ஆட்சி மாற்றங்களால் தடைபட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி அந்த பகுதி மக்கள் கடந்த 2006ம் ஆண்டு அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தபோது அவர்களை நேரில் சந்தித்து திமுக ஆட்சி அமைந்த உடன் இந்த திட்டம் நிறைவேற்றப்படும் என கழகத் தலைவர் தளபதி அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார். இந்தத் திட்டத்துக்கான பணிகள் 2019ல் தொடங்கப்பட்டிருந்தாலும் 2021ல் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்கு பின்னால் 1916.41 கோடி மதிப்பீட்டில் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவு படுத்தப்பட்டன.

ஈரோடு திருப்பூர் கோவை மாவட்ட விவசாய பெருமக்களின் வாழ்வுக்கு வளம் சேர்க்கிற வகையில் இந்த திட்டம் தற்போது நிறைவு பெற்றிருக்கிறது. சுமார் 1,065 கிலோ மீட்டர் நீளத்துக்கு நிலத்திற்கு அடியில் குழாய்களை பதித்து ஆறு நீரேற்று நிலையங்கள் மூலமாக 1,045 ஏரி குளம் குட்டைகளுக்கு நீர் நிரப்பி 24,468 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிற வகையிலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்தற வகையிலும் இந்த திட்டத்தை நிறைவு செய்து 17.8.2024 அன்று தொடங்கி வைத்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பிலும் மாவட்ட கழகத்தின் சார்பிலும் வாழ்த்துக்களையும் நெஞ்சம் நிறைந்த நன்றியையும் இக் கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நீலகிரி மாவட்ட தி.மு.க.

# நகர - ஒன்றிய - பேரூர் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!



நீலகிரி, ஆக. 25 –

நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

நீலகிரி மாவட்ட திமுக நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் இன்று (25.8.2024 – ஞாயிற்றுக் கிழமை) காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

பொருள்: 1. கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பின் படி, நகரஒன்றியபேரூர் கழகங்ளில் பொது உறுப்பினர் கூட்டங்கள் நடைபெறும் தேதிகள் முறைபடுத்துவது குறித்து.

2. 21.8.2024 உதகையில் நடைபெற்ற நீலகிரி மாவட்ட கழக கூட்ட முடிவுகளை நடைமுறைபடுத்துவது குறித்து.

3. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் பேச்சுப் போட்டி!

## மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ்,எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கிருஷ்ணகிரி, ஆக. 25-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி என் உயிரிலும் மேலான என்ற தலைப்பில் இன்று (25.08.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணி முதல் ஒசூர் சூடப்பா திருமண மண்டத்தில் பேச்சுப் போட்டி நடைபெற உள்ளது.

இதில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் ஒசூர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாநகர செயலாளரும் மேயருமான எஸ்.ஏ.சத்யா, தலைமையேற்று துவக்கி வைக்க உள்ளனர். இப்பேச்சு போட்டி இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர், மாநகர துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது. இப்பேச்சு போட்டிக்கு மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் பி.எஸ்.சீனிவாசன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மேற்பார்வையில் நடைபெற உள்ளது.

இப்போட்டியில் அடுத்த சுற்றுக்கு தேர்ந்தெடுப்பவர்களுக்கு தலா 10000 வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக மாவட்டம் கும்பகோணத்தில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத்துறை சார்பில் கால்நடை பெரு மருத்துவமனை புதிய கட்டத்தினை 20.08.2024 அன்று திறந்து வைத்ததை தொடர்ந்து மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் ஆகியோர் பார்வையிட்டார்கள். கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், துணை மேயர் சுப.தமிழழகன், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.பூர்ணிமா, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் ஆர்.கார்த்திகேயன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.